**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,சிங்கம்புணரி**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,LLM.,B.Sc.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,சிங்கம்புணரி

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ம் நாள் திங்கள்கிழமை

(2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 9 ம் நாள்)

**ஆண்டு பட்டிகை வழக்கு எண் 1/2020**

(CNR No:TNSV160000612020)

அரசுக்காக
சார்பு ஆய்வாளர்,
நெற்குப்பை காவல் நிலையம்,
குற்ற எண்:14/2019 -- குற்ற முறையீட்டாளர்

/ எதிர் /

1. லெட்சுமணன் (வயது 30/20)
த/பெ.சின்னகருப்பன் (எ) கருப்பையா,
பூசனிகளம்
நெற்குப்பை
திருப்பத்தூர் தாலுகா.
சிவகங்கை மாவட்டம்.

2. சரசு (எ) சரஸ்வதி (வயது 52/20)
த/பெ.சின்னகருப்பன் (எ) கருப்பையா,
பூசனிகளம்
நெற்குப்பை
திருப்பத்தூர் தாலுகா.
சிவகங்கை மாவட்டம்.

3. சொக்கலிங்கம் (வயது 38/20)
த/பெ.சேவுகன்,
பூசனிகளம்
நெற்குப்பை
திருப்பத்தூர் தாலுகா.
சிவகங்கை மாவட்டம்.

4. சேவுகன் (வயது 55/20)
த/பெ.கருப்பையா,
பூசனிகளம்
நெற்குப்பை
திருப்பத்தூர் தாலுகா.
சிவகங்கை மாவட்டம். -- குற்றம்சாட்டப்பட்டவர்கள்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:40:16 +0530

**வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | குற்றம்சாட்டப்பட்டவர்கள் காவல் அடைப்பிற்கு உட்படுத்திய காலம் | 28.01.2019 – 31.01.2019 (1 வது குற்றம்சாட்டப்பட்டவர்) |
| 2. | நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 20.12.2019 |
| 3. | இவ்வழக்கு கோப்பினை அமர்வு நீதிமன்றத்திற்கு மேல்விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | இல்லை |
| 4. | குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் கு.வி.மு.ச பிரிவு 240–ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்டு குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 02.12.2021 |
| 5. | குற்றவியல் பல்வகை மனு தாக்கல் செய்த விவரமும் அதன் முடிவும் (கு.வி.மு.ச.பிரிவு 317 மனு தவிர) | (1) 1 வது குற்றம்சாட்டப்பட்டவரின் 437 சிஆர்.பி.சி–யின் கீழான பிணை மனு சிஆர்.எம்.பிஎண்: 254/2019 நாள்:31.01.2019 அனுமதிக்கப்பட்டது.<br>(2) 2 வது குற்றம்சாட்டப்பட்டவரின் 438 சிஆர்.பி.சி–யின் கீழான முன் முன் பிணை மனு: சிஆர்.எம்.பி.எண்:282/2019 நாள்:04.02.2019 அனுமதிக்கப்பட்டது. (மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை)<br>(3) 2ம் குற்றம்சாட்டப்பட்டவரின் சரண்டர் மனு 15.02.2019 ல் அனுமதிக்கப்பட்டது.<br>(4) 4 வது குற்றம்சாட்டப்பட்டவரின் 438 சிஆர்.பி.சி–யின் கீழான முன் முன் பிணை மனு: சிஆர்.எம்.பி.எண்:549/2019 நாள்:02.03.2019 அனுமதிக்கப்பட்டது. |

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:40:31 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | (மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை)<br>(5) 4ம் குற்றம்சாட்டப்பட்டவரின் சரண்டர் மனு: சிஆர்.எம்.பி.எண் 806/2019 18.03.2019 ல் அனுமதிக்கப்பட்டது.<br>(6) 3 வது குற்றம்சாட்டப்பட்டவரின் 438 சிஆர்.பி.சி–யின் கீழான முன் முன் பிணை மனு: சிஆர்.எம்.பி.எண்:664/2019 நாள்:19.03.2019 அனுமதிக்கப்பட்டது.<br>(மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை)<br>(7) 3 வது குற்றம்சாட்டப்பட்டவரின் சரண்டர் மனு சிஆர்.எம்.பி. எண்:870/2019 – 27.03.2019 அனுமதிக்கப்பட்டது.<br>(8) 1 வது குற்றம்சாட்டப்பட்டவரின் நிபந்தனை தளர்வு கோரும் மனு: சிஆர்.எம்.பி.எண்:961/2019 நாள்:09.04.2019 அனுமதிக்கப்பட்டது. | | |
| 6. | அரசு தரப்பு சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அரசு தரப்பு சாட்சிகள் | முதல் விசாரணை செய்த நாள் | குறுக்கு விசாரணை செய்த நாள் |
| | | அ.சா.1 | 10.07.2025 | 19.07.2025 |
| | | அ.சா.2 | 19.07.2025 | 19.07.2025 |
| | | அ.சா.3 | 02.01.2025 | இல்லை |
| | | அ.சா.4 | 12.11.2025 | 12.11.2025 |
| | | அ.சா.5 | 11.03.2026 | 11.03.2026 |
| 7. | கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ) ன் படி குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் வினாக்கள் வினவப்பட்ட நாள் | 12.03.2026 | | |

ABARNA GUNASEKAR

Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:40:37 +0530

| | | |
|---|---|---|
| 8. | குற்றம்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான விவரம் மற்றும் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜரான விவரம் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விவரம் | 1,2 வது குற்றம்சாட்டப்பட்டவர்களின் ரீகால் மனு : சிஆம்.எம்.பி.எண்:3166/2022 நாள்:10.11.22 அனுமதிக்கப்பட்டது. 1,2 வது குற்றம்சாட்டப்பட்டவர்களின் அட்வான்ஸ் மனு : சிஆம்.எம்.பி.எண்:3167/2022 நாள்:10.11.22 அனுமதிக்கப்பட்டது. |
| 9. | மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தடை உத்தரவு குறித்த விவரம் | இல்லை |

இவ்வழக்கானது ஆண்டுபட்டிகை வழக்கு எண்:1/2020 என இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 16.03.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது அரசுத்தரப்பில் அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1,2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.தினேஷ் அவர்கள் ஆஜராகியும், 3,4 குற்றம்சாட்டப்பட்டவர்களின் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.முத்துராமன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களை பார்வையிட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

1. நெற்குப்பை காவல்நிலைய காவல் ஆய்வாளர் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 506(2)ன் படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவு 323 ன் படியும், 3 மற்றும் 4 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 506(2) r/w.109 ன் கீழும் குற்றம் புரிந்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரான அழகு என்பவருக்கும் அவரது அண்ணன்களான 4 வது எதிரியான சேவுகன் மற்றும் மூத்த அண்ணன்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:40:44 +0530

சின்னகருப்பன் (எ) கருப்பையா ஆகியோர்களுக்கும் இடையே கடந்த ஆண்டு இட தகராறில் அடிதடி ஏற்பட்டதில் சின்னகருப்பன் (எ) கருப்பையா இறந்துவிட்டதால் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு குடும்பத்தோடு சிறை சென்று தற்போது ஜாமினில் வெளியே வந்துள்ள நிலையில், 28.01.2019 ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரர் அழகு என்பவரும் அவரது மனைவி ரெத்தினமும் பூசனிகளத்தில் உள்ள அவர்களது வீட்டிற்கு சென்றிருந்த போது 1 வது எதிரி 3 மற்றும் 4 வது எதிரிகளின் தூண்டுதலின் பேரில் அவர்கள் வீட்டு முன்பு சென்று நிகழ்நிலை புகார்தாரரையும், அவரது மனைவி ரெத்தினத்தையும் வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தி உங்களுக்கு இங்கே என்ன வேலை? உங்களுக்கு இங்கு வீடு வாசல் எதுவும் இல்லை என்று புண்ட மகன்களா, சுண்ணி, தேவிடியா பயலே, வெளியே போடா என்று நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து அசிங்கமாக பேசி தடுத்துள்ளார் என்றும் மேலும் 1 வது எதிரி தனது கையில் அரிவாள் எடுத்து வந்து நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து என் அப்பனை கொன்ன உன்னை கெலை செய்யாமல் விடமாட்டேன், உன்னையும் உன் குடும்பத்தையும், கரு அறுக்காமல் விடமாட்டேன் எப்ப இருந்தாலும் உங்கள் சாவு என் கையில் தான் உள்ளது என்று சொல்லி மிரட்டியுள்ளார் என்றும் 2 வது எதிரி கையில் மம்பட்டி கணையை எடுத்து கொண்டு நிகழ்நிலை புகார்தாரரையும், அவரது மனைவியையும் அடிக்க சென்ற போது 2 வது எதிரி நிகழ்நிலை புகார்தாரர் மனைவியை கீழே தள்ளி விட்டு வலது கையில் சொற்ப காயத்தை ஏற்படுத்திய குற்றம் புரிந்துள்ளதாக 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 506(2)ன் படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவு 323 ன் படியும், 3 மற்றும் 4 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 506(2) r/w.109 ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்த இறுதி அறிக்கையை கோப்பிற்கு எடுத்த இந்த நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவர்களின் குற்றச்செயல்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:40:51 +0530

குறித்து அடிப்படை முகாந்திரம் இருப்பதாக கருதியதால் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியது. அழைப்பாணையின் பேரில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகினர். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

4. குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் குற்றம் குறித்து வினவிய போது குற்றம்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்தனர். இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. குற்றம்சாட்டப்பட்டவர்களின் கருத்தும் கேட்கப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டு குறித்து அடிப்படை முகாந்திரம் இருந்த காரணத்தால் 1ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 506(2)ன் கீழும், 3,4 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 506(2) r/w.109ன் கீழும், 2ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவு 323ன் கீழும் குற்றச்சாட்டு வனைந்து, வாசித்து விளக்கி கூறி வினவப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப் பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் எதுவும் முன்னிலைப் படுத்தப்படவில்லை.

6. **<u>அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியம் மற்றும் ஆவணங்களிலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு :–</u>**

6(1).அ.சா.1 அழகு இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் காயம்பட்ட நபர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் கடந்த 28.01.2019ம் தேதி சுமார் 11 – 11.30 மணியளவில் தான் தனது மகள் வீட்டில் இரண்டு மாதம் தங்கிவிட்டு தன்னுடைய வீட்டிற்கு வந்த போது எதிரிகள் நால்வரும் தன் வீட்டு பக்கத்தில் இருந்தார்கள் என்றும் தன்னுடைய வீட்டின் ஓடுகள் உடைக்கப்பட்டிருந்தன என்றும் 1வது எதிரி தன்னை கோத்தா, கொம்மா என்று தரக்குறைவான

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:40:58 +0530

வார்த்தைகளால் பேசி தன்னை அவமானப்படுத்தினார் என்றும் 1வது எதிரி நீ ஏன்டா வீட்டிற்கு வந்தாய் என்று 3,4 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் சத்தம் போட்டார் என்றும் 3,4 எதிரிகளின் தூண்டுதலில் 1வது எதிரி தன்னை பார்த்து உன் சாவு தன் கையில் தான்டா உன் கருவை அழிச்சுபுடுவேன் என்று அருவாளை தூக்கி வெட்ட வந்தார் என்றும் தனது மனைவி 1வது எதிரியை தடுத்த போது 2வது எதிரி மண்வெட்டி கணையால் தனது மனைவியின் வலது பக்க தோள்பட்டையில் அடித்து காயப்படுத்தினார் என்றும் சண்டையை சேவுகன், சுப்பிரமணியன் ஆகியோர் விலக்கி விட்டார்கள் என்றும் பின்னர் நெற்குப்பை காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்ததாகவும், புகாரை தனது மருமகன் எழுதினார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(2) அ.சா.2 ரெத்தினம் சம்பவத்தை கண்ணுற்ற நபர் ஆவார். இவர் அ.சா.1ன் மனைவி ஆவார். இவர் தனது சாட்சியத்தில் எதிரிகள் அசிங்கமாக பேசி, தன்னையும், தனது கணவரையும் வழிமறித்து தாக்கி, கொலைமிரட்டல் விடுத்த குற்ற நிகழ்வினை கண்ணுற்றது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 சேவுகன் சம்பவத்தை கண்ணுற்று விலக்கிவிட்ட நபர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் சம்பவத்தை கண்ணுற்று விலக்கிவிட்ட நிகழ்வினை குறித்து பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர்.

6(3) அ.சா.4 கண்ணன் பார்வை மகஜர் சாட்சியாவார். இவர் தனது சாட்சியத்தில் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

6(4) அ.சா.5 அரங்கநாயகி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 28.01.2019ம் தேதி 16.00 மணிக்கு நெற்குப்பை காவல்நிலைய பொறுப்பில் இருந்த போது பூசணிகளத்தை சேர்ந்த கருப்பையா மகன் அழகு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்:14/2019ல் இதச பிரிவுகள் 341, 394(பி), 323, 506(2)ன் கீழ் அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் அன்றையதினம்

ABARNA GUNASEKAR

Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:41:07 +0530

16.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கண்ணன் மற்றும் பாண்டிமுருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் அ.த.சா.ஆ–4 மாதிரி வரைபடம் தயார் செய்து, வழக்கு விசாரணையிலிருந்து இவ்வழக்கின் சட்டபிரிவை மாற்றம் செய்து இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 506(2), 109 ன் கீழ் அ.த.சா.ஆ.4 சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து, பின்னர் இவ்வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

7.அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தபட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரிகளிடம் விளக்கிக் கூறி கு.வி.மு.ச. பிரிவு 313 (1)(b)–ன் கீழ் வினவிய போது, எதிரிகள் அவை அனைத்தும் பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்று மறுத்தனர்.

8. பின்னிட்டு இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன.

9. அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது புகார்தாரரும், காயம்பட்ட நபரான அ.சா.1 ம், சம்பவத்தை கண்ணுற்ற மற்றும் காயம்பட்ட நபரான அ.சா.2 ம் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தாக்கியதால் தங்களுக்கு காயம் ஏற்பட்டது குறித்து வாய்மொழியாக சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் புகார்தாரரும், காயம்பட்ட நபரான அ.சா.1–ன் சாட்சியத்திற்கு ஆதரவாக சம்பவத்தை கண்ணுற்ற காயம்பட்ட நபரான அ.சா.2 சாட்சியின் சாட்சியம் அமைந்துள்ளது என்றும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் எடுத்துரைத்தார்.

10. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது அரசு தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றத்தை நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்றும். இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களான அ.சா.1, அ.சா.2 க்கும் எதிரிகளால் காயம் ஏற்படவில்லை

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:41:16 +0530

என்றும், எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் இடையே இருந்த இடப்பிரச்சனை சம்பந்தமான முன்விரோதத்தின் காரணமாக புகார்தாரர் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது வன்மம் கொண்டு பொய் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அரசு தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய தவறிவிட்டதால் எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்று வாதம் எடுத்துரைத்தார்.

11. **<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>:–**

(அ). 1ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 506(2)ன் கீழும், 3,4 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 506(2) r/w.109 ன் கீழும், 2ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவு 323 ன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதா?

(ஆ).ஆம் எனில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய தண்டனை என்ன என்பதேயாகும்.

**<u>12 .பரிசீலனையும் தீர்வும்:–</u>**

12(1) இவ்வழக்கில் அ.சா.1 புகார்தாரர் மற்றும் சம்பவத்தில் காயம்பட்ட நபராவார். அ.சா.2 சம்பவத்தை கண்ணுற்ற நபராவார். சம்பவம் குறித்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் மட்டுமே சாட்சியம் அளித்துள்ளனர். எதிரிகள் தரப்பில் அ.சா.1, அ.சா.2 அக்கறையுள்ள சாட்சிகள் என்பதால் அவர்களது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று வாதம் முன்வைக்கப்பட்டது.

12(2). மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கிய Vadivel Devar – Vs – State of Madras, AIR 1957 SC 614 என்ற முன்தீர்ப்பில் ஒரு பொருண்மையை நிரூபிக்க முழுமையாக நம்பத் தகுந்த ஒரு சாட்சியே போதும் என கூறியுள்ளது. சாட்சிகள் எண்ணிக்கையை விட சாட்சிகளின் தரமே முக்கியம் என்பது நன்கு நிறுவப்பட்ட சட்ட நெறியாகும். எனவே அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்கள் வாயிலாக அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.23 17:41:23 +0530

என்பதை பரிசீலிக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

12(3). 1,3,4 எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 341, 294(பி) ன் கீழ் குற்றசாட்டு வனையப்பட்டுள்ளது. இதச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டை பார்க்கும் போது ஒரு நபர் அசிங்கமான வார்த்தைகளை உபயோகித்திருக்க வேண்டும். அந்த வார்த்தைகளை பொது இடத்தில் பிறர் முன்னிலையில் பயன்படுத்தியிருக்க வேண்டும். அதனால் பாதிக்கப்பட்ட நபருக்கு பிறர் முன்னிலையில் அவமானம் நேர்ந்து மனஉளைச்சல் ஏற்பட்டிருக்க வேண்டும். அதை பார்த்த பிற நபர்களுக்கு அருவருப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். இவை அனைத்தும் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே இதச பிரிவு 294(பி)ன் கீழ் தண்டனைக்குரிய செயலாகும். வெறுமனே தகாத வார்த்தைகள் உதிர்ப்பது மட்டுமே இதச பிரிவு 294(பி)ன் கீழ் தண்டனைக்குரிய செயல் என்று கருத இயலாது.

12(4) இதச பிரிவு 341ன் கீழான குற்றச்சாட்டை பார்க்கும் போது எவரையேனும் சட்டவிரோதமான வகையில் தடுத்து வைக்கிற எவரொருவரும், ஒரு மாதம் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்கு மெய்காவல் தண்டனையோ அல்லது ஐந்நூறு ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

12(5) 1,3,4 எதிரிகளுக்கு எதிராக கடந்த 28.01.2019 ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரரும், அவரது மனைவியான ரத்தினமும் பூசணிகளத்தில் உள்ள அவர்களது வீட்டிற்கு சென்ற போது 3,4 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் 1வது எதிரி நிகழ்நிலை புகார்தாரர் வீட்டின் முன்பு சென்று நிகழ்நிலை புகார்தாரரையும், அவரது மனைவி ரத்தினத்தையும் வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தியதாகவும், நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து உங்களுக்கு இங்கே என்ன வேலை? உங்களுக்கு இங்கு வீடு வாசல் எதுவும் இல்லை புண்ட மகன்களா? சுண்ணி, தேவிடியா பயலே வெளியே போடா என்று அசிங்கமாக பேசியதாக குற்றச்சாட்டு

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.23 17:41:29 +0530

வனையப்பட்டுள்ளது.

12(6). அ.சா.1 தனது புகாரில் கடந்த 28.01.2019 ம் தேதி மணி 11.30 க்கு தனது மகள் லதா வீடான நெல்மேனி பட்டியில் தங்கியிருந்து 2 மாதம் கழித்து தனது வீட்டிற்கு சென்ற போது தங்களை வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தி உங்களுக்கு இங்கே என்ன வேலை? உங்களுக்கு இங்கு வீடு, வாசல் எதுவும் இல்லை என்று சொல்லி புண்டா மகன்களா, சுண்ணி, தேவடியா பயளே வெளியோ போடா என்று தடுத்தான் என்று கூறியுள்ளார்.

12(7) அ.சா.1 தனது சாட்சியத்தில் 28.01.2019 ம் தேதி சுமார் 11 – 11.30 மணியளவில் தனது மகள் வீட்டில் இரண்டு மாதம் தங்கிவிட்டு தன்னுடைய வீட்டிற்கு வந்த போது எதிரிகள் நால்வரும் தன் வீட்டு பக்கத்தில் இருந்தார்கள் என்றும் தன்னுடைய வீட்டின் ஓடுகள் உடைக்கப்பட்டிருந்தது என்றும் 1 வது எதிரி லெட்சுமணன் தன்னை கோத்தா, கொம்மா என தரக்குறைவான வார்த்தைகளால் பேசி தன்னை அவமானப்படுத்தினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது புகாரில் யார் தன்னை தடுத்து நிறுத்தி அசிங்கமாக பேசினார் என்பது குறித்து குறிப்பிட்டு புகார் கொடுக்கவில்லை.

12(8) சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் எதிரிகள் நால்வரும் தங்கள் வீட்டின் வாசல் படியில் நின்று கொண்டிருந்தார்கள் என்றும் நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போக கூடாது உங்களுக்கு வீடு வாசல் இல்லை தேவடியா பயலே என்று பேசி எதிரி லெட்சுமணன் தள்ளுமுள்ளு ஏற்படுத்தி அடிக்க வந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் தங்களது சாட்சியத்தில் 1 வது எதிரி அசிங்கமாக பேசிய வார்த்தைகள் குறித்து ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர்..

12(9) அ.த.சா.ஆ.4 மாதிரி வரைபடத்தை பரிசீலிக்கையில் வாதியின் ஓட்டு வீடு முன்பு கம்பி வேலிக்கு உள்பக்கமாக நடந்துள்ளது தெரிய வருகிறது. எனவே சம்பவ இடமானது அ.சா.1 க்கு சொந்தமான வீட்டின் முன்பு

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.23 17:41:36 +0530

நடந்துள்ளது தெரிய வருகிறது. எனவே சம்பவ இடம் பொது மக்கள் புழங்கக் கூடிய பொது இடம் என்று அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை.

12(10) அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.1 யை அசிங்கமாக பேசியதால் தங்களுக்கோ, அங்கிருந்த பிற நபர்களுக்கோ அருவருப்பு மற்றும் அவமானம் நேர்ந்தது என்று எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில் இதச பிரிவு 294(பி)ன் கீழான ஆக்கக் கூறுகள் இல்லாத நிலையில் எதிரிகள் இதச பிரிவு 294(பி)ன் கீழ் குற்றம் புரிந்தததாக கருத இயலவில்லை. இந்நிலையில் எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை.

12(11) அ.சா.1 தனது புகாரில் கடந்த 28.01.2019 ம் தேதி மணி 11.30 க்கு தனது மகள் லதா வீட்டிலிருந்து நெல்மேனி பட்டியில் தங்கியிருந்து 2 மாதம் கழித்து தனது வீட்டிற்கு சென்ற போது தங்களை வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தியதாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 தனது புகாரில் யார் தங்களை தடுத்து நிறுத்தினார்கள் என்று குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை. மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் தங்கள் தடுத்து நிறுத்தியது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே எதிரிகள் மீதான இதச பிரிவு 341 ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை.

12(12) 2 வது எதிரி மீது இதச பிரிவு 323 ன் கீழான குற்றச்சாட்டை பார்க்கும்பொழுது, 2 வது எதிரி கையில் மண்வெட்டி கடையை எடுத்து கொண்டு நிகழ்நிலை புகார்தாரரையும், ரத்தினத்தையும் அடிக்க சென்றும், 2 வது எதிரி ரத்தினத்தை கீழே தள்ளிவிட்டு விழுந்ததில் ரத்தினத்திற்கு வலது கையில் சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாக குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

12(13) அ.த.சா.ஆ–1 புகார்மனுவில் 2 வது எதிரி கையில் மம்பட்டி கணையை எடுத்து வந்து தன்னையும் தன் மனைவியையும் தாக்க முற்பட்ட போது தன் மனைவி கீழே விழுந்து சிறுகாயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.23 17:41:43 +0530

புகார் கொடுத்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் 2 வது எதிரி மண்வெட்டி கணையால் தனது மனைவியின் வலது பக்க தோள்பட்டையில் அடித்து காயப்படுத்தினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது புகாரில் உள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

12(14) அ.சா.1 தனது புகாரில் தனது மனைவி கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு புகார் கொடுத்துள்ளார். சம்பவத்தில் காயம்பட்டதாக சொல்லப்படும் அ.சா.2 தனது சாட்சியத்தில் அருவாளை லெட்சுமணன் எடுத்து வந்து தனது கணவரை வெட்ட வந்தார் என்றும் தான் அதை தடுத்தேன் என்றும் 2 வது எதிரி மண்வெட்டியால் வலதுபுறம் தோள்பட்டையில் அடித்தார் தான் கீழே விழுந்து விட்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டதா? மண்வெட்டியால் அடித்ததில் காயம் ஏற்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(15) அ.சா.1 தனது புகாரில் தனது மனைவி கீழே விழுந்து சிறுகாயம் ஏற்பட்டது என்றும் சிறுகாயம் என்பதால் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் தன்னுடைய மனைவி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கொண்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் தங்களது சாட்சியத்தில் அ.சா.2 க்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற்றது குறித்து புகாரில் உள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.த.சா.ஆ–1 ன் புகாரில் உள்ள சங்கதிகள் உண்மைதன்மையுடையதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(16) அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவத்தின் போது தனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். உண்மையில் அ.சா.2 யை 2 வது எதிரி தாக்கியிருந்தால்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.23 17:41:52 +0530

உடனடியாக மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றிருப்பார். எனவே அ.சா.2 க்கு 2 வது எதிரியால் காயம் ஏற்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(17) அ.த.சா.ஆ.1 புகார்மனுவில் 28.01.2019 ம் தேதி 11.30 மணிக்கு தங்களை வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தினார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் நால்வரும் தன் வீட்டு பக்கத்தில் இருந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் எதிரிகள் நால்வரும் தங்கள் வீட்டின் வாசல் படியில நின்று கொண்டிருந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரிகள் வீடும் தங்கள் வீடும் பக்கத்து பக்கத்து வீடு என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே சம்பவ சமயத்தில் எதிரிகள் அ.சா.1 ன் வீட்டின் வாசல் படியில் இருந்தார்களா? எதிரிகளின் வீட்டில் இருந்தார்களா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(18) அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரி வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையில் முள்வேலி உள்ளது என்றும் எதிரிகள் சாலை வழியாக வந்து தான் தங்கள் வீட்டிற்கு வர முடியும் என்றும் தான் வீட்டிற்கு வரும் போது எதிரிகள் தன்னை தடுத்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரிகள் சாலை வழியாக வந்து தான் எங்கள் வீட்டிற்கு வர முடியும் என்றும் நான் எனது வீட்டிற்கு வரும் போது எதிரிகள் தடுத்தார்கள் என்றும் சாலையில் எங்கள் வீட்டருகே வந்து தடுத்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(19) அ.த.சா.ஆ–4 மாதிரி வரைபடத்தை பரிசீலிக்கையில் அசா.1 ன் ஓட்டு வீட்டிற்கு முன்பு கம்பிவேலிக்குள் சம்பவம் நடந்ததாக காணப்படுகிறது. சம்பவமானது சாலையில் அ.சா.1 ன் வீட்டருகே நடந்ததாக காணப்படவில்லை. எனவே சம்பவமானது அ.சா.1 ன் வீட்டிற்கு முன்பு நடந்ததா? சாலை ஓரம் அ.சா.1 ன் வீட்டின் முன்பு நடந்ததா? என்ற ஐயப்பாடு எழுகிறது. எனவே சம்பவ இடம்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:42:00 +0530

அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை.

12(20) அ.சா.1 தனது சாட்சியத்தில் 28.01.2019ம் தேதி சுமார் 11 – 11.30 மணியளவில் தனது மகள் வீட்டில் இரண்டு மாதம் தங்கிவிட்டு தன்னுடைய வீட்டிற்கு வந்த போது எதிரிகள் நால்வரும் தன் வீட்டு பக்கத்தில் இருந்தார்கள் என்றும் தன்னுடைய வீட்டின் ஓடுகள் உடைக்கப்பட்டிருந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தனது வீட்டின் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன என்றும் ஆனால் ஓடுகள் உடைந்து இருந்தது என்றும் 10, 20 ஓடுகள் உடைந்து சிதறி கிடந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2ம் தங்களது சாட்சியத்தில் தங்கள் வீட்டு ஓடுகள் உடைக்கப்பட்டதாக புகாரில் இல்லாத புதிய சங்கதி குறித்து சாட்சியம் அளித்துள்ளனர்.

12(21) இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.5 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் புகார்தாரர் வீட்டில் உள்ள ஓடுகள் உடைக்கப்பட்டு இருந்ததா என்றால் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். உண்மையில் அ.சா.1ன் வீட்டின் ஓடுகள் உடைக்கப்பட்டிருந்தால் அதன் சேத மதிப்பு குறித்து தனது புகாரில் அ.சா.1 குறிப்பிட்டு கூறியிருப்பார்.

12(22) அ.சா.1 தனது புகாரில் சம்பவம் நடந்த இடத்தில் ஊர் அம்பலம் சுப்பிரமணி மற்றும் ரா.சேவுகன் உடனிருந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2ம் தங்களது சாட்சியத்தில் சுப்பிரமணி மற்றும் சேவுகன் ஆகியோர்கள் சண்டையை விலக்கி விட்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளனர். சம்பவத்தை கண்ணுற்று விலக்கி விட்டதாக சொல்லப்படும் அ.சா.3 தனது சாட்சியத்தில் வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். உண்மையில் அ.சா.3 சம்பவ இடத்தில் இருந்திருந்தால் சம்பவம் குறித்து சாட்சியம் அளித்திருப்பார். எனவே அ.சா.3 சம்பவ இடத்தில் இல்லை என்பது தெரிய வருகிறது.

12(23) அ.சா.1 தனது புகாரில் எதிரிகள் தங்களை தாக்க முற்பட்டது

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:42:10 +0530

மற்றும் கொலைவெறியோடு அவதூராக பேசியது சம்பந்தமான ஆடியோ மற்றும் வீடியோ ஆதாரங்களை டிவிடி ஆக உடன் இணைத்துள்ளேன் என்று கூறியுள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவத்தின் போது ஆடியோ மற்றும் வீடியோ ஆதாரங்களை இணைத்து புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான் என்றும் அந்த புகைப்படம் மற்றும் வீடியோ ஆகியவற்றை தான் எடுக்கவில்லை என்றும் யாரோ புகைப்படம் மற்றும் வீடியோவை அனுப்பி இருந்தார்கள் என்றும் அவர்கள் பெயர் தெரியவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(24) அ.சா.2 தனது சாட்சியத்தில் சம்பவத்தில் புகைப்படங்கள் வீடியோக்களை தான் எடுக்கவில்லை என்றும் யாரோ புகைப்படம் மற்றும் வீடியோவை எடுத்து தனது பேரன் செல் போனிற்கு அனுப்பி இருந்தார்கள் என்றும் அவர்கள் பெயர் தெரியவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி மேற்படி புகைப்படங்கள், வீடியோக்கள் அடங்கிய டிவிடி–யை இவ்வழக்கில் சான்று பொருளாக தாக்கல் செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது.

12(25) அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் பூர்வீக சொத்துக்கள் அனைத்தும் தனது தகப்பனார் பெயரில் உள்ளதா என்றால் அவரவர் பெயரில் தனி பட்டாவில் உள்ளது என்றும் என் மீதும் மனைவி ரத்தினம், மகள், மகன், கண்ணன், பாண்டிமுருகன், மகாலெட்சுமி, லதா மற்றும் பேரன் தினேஷ்பாண்டி ஆகியோர் மீது நெற்குப்பை காவல்நிலைய குற்ற எண்:60/2018 வழக்கு உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தான் சம்பவம் அன்று நெற்குப்பை காவல்நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு ஊருக்கு வந்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே எதிரிகளுக்கும் அ.சா.1 ற்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் இருந்துள்ளதன் காரணமாக எதிரிகள் மீது காழ்ப்புணர்ச்சி காரணமாக பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:42:25 +0530

என்ற எதிரிகள் தரப்பு வாதம் வலுப்பெறுகிறது.

12(26) அ.சா.1 தனது புகாரிலும், சாட்சியத்திலும் சம்பவத்தின் போது சுப்பிரமணி மற்றும் சேவுகன் உடனிருந்தனர் என்று கூறியுள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரிகள் தங்களை அடிக்கும் போது 5,6 நபர்கள் இருந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி 5,6 நபர்கள் யார் என்பது குறித்து விசாரணை செய்து சாட்சியாக சேர்க்காதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது.

12(27) அ.சா.1 தனது சாட்சியத்தில் நான் சொல்ல சொல்ல புகாரை தனது மருமகன் எழுதினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் புகாரை தனது மருமகன் எழுதி கொடுத்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.த.சா.ஆ.1 புகாரை எழுதிய அ.சா.1ன் மருமகனை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்காதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது.

12(28) பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில் 28.01.2019ம் தேதி மாலை சுமார் 4 – 5 மணியளவில் சம்பவ இடமான பூசணிகளத்திற்கு வந்து அ.சா.1ன் வீட்டு அருகே வரைபடம தயார் செய்து விசாரணை செய்ததில் தானும், பாண்டிமுருகனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.4 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் அ.சா.1 தனது அப்பா என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(29) அ.சா.1 தனது புகாரில் தாங்கள் நெல்மேனிபட்டியில் தனது மகள் வீட்டில் இருந்து விட்டு 2 மாதம் கழித்து சம்பவத்தன்று வீட்டிற்கு வந்ததாக கூறியுள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தாங்கள் வீட்டிற்கு வரும் போது தனது வீடு பூட்டப்பட்டு இருந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.2 சம்பவத்திற்கு பின்னீடு தனது மகள் வீட்டில் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.ஆ–3 புகார்மனுவினை பரிசீலிக்கையில் புகாரானது 16.00 மணிக்கு பெற்றப்பட்டதாக காணப்படுகிறது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:42:31 +0530

அ.த.சா.ஆ–2 பார்வை மகஜர் ஆவணமானது 16.45 மணிக்கு தயார் செய்யப்பட்டதாக காணப்படுகிறது. அ.சா.2 சம்பவத்திற்கு பின்னீடு நெல்மேனியில் அவரது மகள் வீட்டில் இருந்த போது 16.45 மணிக்கு பார்வை மகஜர் ஆவணம் தயார் செய்திருக்க வாய்ப்பில்லை.

12(30) அ.த.சா.ஆ.2 பார்வை மகஜர் ஆவணத்தை பரிசீலிக்கையில் அ.சா.4 கண்ணன் என்று ஆங்கிலத்திலும், நீதிமன்ற வாக்குமூலத்தில் கண்ணன் என்று தமிழிலும் கையொப்பம் செய்துள்ளார். எனவே அ.த.சா.ஆ–2 பார்வை மகஜர் ஆவணத்தில் அ.சா.4 தான் கையொப்பம் செய்தாரா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(31) அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் அரிவாள் மற்றும் மண்வெட்டி கணையால் தாக்கியதாக கூறியுள்ள நிலையில் மேற்படி பொருட்களை அரசு தரப்பில் கைப்பற்றி சான்று பொருளாக தாக்கல் செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது. எனவே அ.சா.2 க்கு ஏற்பட்ட காயம் 2 வது எதிரியால் தான் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே 2 வது எதிரிக்கு எதிரான இதச பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பு நிரூபணம் செய்துள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12(32). 1,3 மற்றும் 4 ம் எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டை பரிசீலக்கையில் 3 மற்றும் 4 ம் எதிரிகளின் தூண்டுதலின் பேரில் 1 வது எதிரி கையில் அரிவாள் எடுத்து வந்து அ.சா.1 யை பதார்த்து என் அப்பனை கொன்ற உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன், உன்னையும் உன் குடும்பத்தையும் கருஅறுக்காமல் விடமாட்டேன் எப்ப இருந்தாலும் உங்கள் சாவு என் கையில் தான் உள்ளது என்று மிரட்டியதாக குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

12(33) அ.சா.1 தனது புகார்மனுவில் 3,4 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் 1 வது எதிரி கையில் அருவாள் எடுத்து வந்து தன்னை பார்த்து என் அப்பனை

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:42:39 +0530

கொன்ற உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் உன்னையும் உன் குடும்பத்தையும் கரு அறுக்காமல் விடமாட்டேன் என்று எப்ப இருந்தாலும் உங்கள் சாவு என் கையில் தான் உள்ளது என்று கொலை செய்ய வந்தான் என்று கூறியுள்ளார்.

12(34) அ.சா.1 தனது சாட்சியத்தில் 3,4 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் 1வது எதிரி தன்னை பார்த்து உன் சாவு என் கையில் தான்டா உன் கருவை அழிச்சுபுடுவேன் என்றும் அருவாளை தூக்கி வெட்ட வந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்றும் உன்னை கருவருக்காமல் விடமாட்டேன் உன் சாவு என் கையில் தான் என்று சொன்னார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(35) அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கொலை வழக்கில் சேவுகன், சொக்கலிங்கம் தனக்கு அண்ணன் மற்றும் அண்ணன் மகன் ஆவார் என்றும் கொலை வழக்கில் மேற்படியார் சாட்சியாக உள்ளார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1 க்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ளது தெரிய வருகிறது. சம்பவத்தினை விலக்கி விட்டதாக சொல்லப்படும் அ.சா.3 தனது சாட்சியத்தில் எதிரிகள் மிரட்டியது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எதிரிகள் அ.சா.1 மற்றும் அசா.2 யை மிரட்டியிருந்தால் அ.சா.2 க்கு 2 வது எதிரியால் கொடுங்காயம் ஏற்பட்டிருக்க கூடும். ஆனால் அ.சா.2 தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு கொலை மிரட்டல் விடுத்தார்களா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(36) உண்மையிலேயே எதிரிகள் மிரட்டியதால் அசா.1 க்கு உயிர்பயம் ஏற்பட்டிருந்தால் அ.சா.1 உடனே சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் சென்றிருப்பார். ஆனால் அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கும் எதிரிகளால் எந்த காயமும் ஏற்படாமல் சம்பவத்திற்கு பின் 16.00 மணிக்கு காலதாமதமாக புகார்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.23 17:42:46 +0530

கொடுத்துள்ளதை பார்க்கும் போது அ.சா.1 க்கு உயிர்பயம் ஏற்படவில்லை என்பது தெரிய வருகிறது. எதிரிகள் அசா.1 க்கு பீதி விளைவிக்கும் உட்கருத்துடன் கொலை மிரட்டல் நிறைவேற்றப்படுவதை தவிர்க்கும் பொருட்டு, எதிரிகள் செய்ய உரிமை பெற்றிருக்கிற செய்கை எதனையும் செய்யாது விடுவதை, விளைவிக்க அச்சுறுத்தியுள்ளார் என்பதை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. அச்சுறுத்தி பீதி ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இன்றி வெறுமனே கோபத்தால் உதிர்க்கப்படும் வார்த்தைகள் கொலை மிரட்டல் ஆகாது. மேலும் அ.சா.1 தனது புகாரிலும், சாட்சியத்திலும் எதிரிகள் தங்களது அப்பாவை கொலை செய்ததால் மிரட்டியதாக கூறியுள்ளதால், மேற்படி வார்த்தைகள் கொலைமிரட்டல் ஆகாது. எனவே அ.சா.2 க்கு ஏற்பட்ட காயம் 2 வது எதிரியால் ஏற்பட்டதா? என்பது குறித்து ஐயப்பாடு எழுந்துள்ள நிலையில், 1,3,4 எதிரிகள் மீதான இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்தசாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை.

12(37) 3,4 எதிரிகள் மீதான இதச பிரிவு 109 ன் கீழான குற்றச்சாட்டினை பரிசீலிக்கையில், 1 வது எதிரி கையில் அரிவாள் எடுத்து வந்து அ.சா.1 யை பார்த்து என் அப்பனை கொன்ற உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன், உன்னையும், உன் குடும்பத்தையும் கரு அறுக்காமல் விடமாட்டேன் எப்ப இருந்தாலும் உங்கள் சாவு என் கையில் தான் உள்ளது என்று மிரட்டுவதற்கு தூண்டுதலாக இருந்தாக குற்றசாட்டு வனையப்பட்டுள்ளது. இவ்வழக்கின் எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 341, 294(பி), 506(2)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சிய சான்றவாணங்கள் மூலம் நிரூபணம் செய்யாத நிலையில் 3,4 எதிரிகள் மீதான இதச பிரிவு 109 ன் மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டதாக கருத இயலாது.

12(38). இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியங்கள் அ.த.சா.ஆ.1 புகாருக்கும், 161(3)கு.வி.மு.ச வாக்குமூலத்திற்கும் முற்றிலும் முரண்பட்டு காணப்படுகிறது. அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் நீதிமன்றத்தில் முதல் முறையாக புதிய

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.23 17:42:52 +0530

சங்கதிகளை குறித்தும், மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார் என்பதை காண முடிகிறது. சம்பவத்தில் காயம்பட்ட கண்ணுற்றதாக சொல்லப்படும் அ.சா.2 க்கு ஏற்பட்ட காயம் 2 வது எதிரியால் ஏற்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுந்துள்ள நிலையிலும், புகார்தாரர் தனது புகாரில் அரிவாள் மற்றும் மண்வெட்டி கணையால் தாக்கியதாக கூறியுள்ள நிலையில் மேற்படி பொருட்களை அரசு தரப்பில் கைப்பற்றி தாக்கல் செய்யாத நிலையிலும், மேலும் அ.சா.1, அ.சா.2 ன் சாட்சியங்களை உறுதியூட்டும் வகையில் வேறு எந்த சாட்சிகளும் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1, அ.சா.2 ன் சாட்சியம் உண்மை தன்மையுடனும் நம்பகத் தன்மையுடனும் காணப்படவில்லை. இந்நீதிமன்றத்தின் நம்பிக்கையை பெறவில்லை. அ.த.சா.ஆ.1 புகார்மனுவை எழுதிய நபரையும், அ.சா.2 தனது சாட்சியத்தில் 5,6 நபர்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக கூறியுள்ள நிலையில் மேற்படி நபர்களை சாட்சிகளாக சேர்த்து விசாரிக்காததும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் சம்பவ இடத்தில் ஓடுகள் உடைத்தாக கூறியுள்ள நிலையில் மேற்படி ஓடுகள் உடைந்ததை கைப்பற்றி தாக்கல் செய்யாததும் அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளதாலும், அரசு தரப்பில் சம்பவ இடம் குறித்து நிரூபணம் செய்யாததாலும், அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்பது தெள்ளத்தெளிவாக தெரிய வருகிற நிலையில், சார்பு ஆய்வாளரான அ.சா.5 ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளதாலும், தனிப்பட்ட சாட்சியம் அல்லாத உறுதியூட்டப்படாத நலன் கொண்ட அ.சா.1, அ.சா.2 ன் சாட்சியங்களை மட்டுமே அடிப்படையாக கொண்டு அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு குற்றச் சம்பவம் நிரூபணம் செய்யப்பட்டது என எடுத்துக் கொள்ள முடியாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

13. இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு நிரூபணம் செய்ய தவறிவிட்டதென முடிவு செய்து, 1 ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 506(2)ன்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:43:00 +0530

கீழும், 3,4 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 506(2) r/w.109ன் கீழும், 2ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவு 323ன் கீழும் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து குற்றம்சாட்டப்பட்டவர்களை கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் கு.வி.மு.ச பிரிவு 437A–ன் கீழ் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீடு காலத்திற்கு பின் தானாக ரத்தாகும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

14. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சான்று பொருட்கள் குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 23ம் நாள் திங்கள்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவை அறிய பகரப்பட்டது.

ABARNA GUNASEKAR

Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.23 17:43:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | அழகு / புகார்தாரர் |
| அ.சா.2 | ரத்தினம் / சம்பவத்தை கண்ணுற்ற நபர் /காயம்பட்டவர் |
| அ.சா.3 | சேவுகன்/ சம்பவத்தை கண்ணுற்ற நபர் |
| அ.சா.4 | கண்ணன் / பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | அரங்கநாயகி/ சார்பு ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1<br>10.07.2025 | அ.சா.1 | புகார்மனு |
| அ.த.சா.ஆ.2<br>02.01.2025 | அ.சா.4 | பார்வை மகஜர் |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.3 11.03.2025 | அ.சா.5 | முதல்தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 11.03.2025 | அ.சா.5 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5 11.03.2025 | அ.சா.5 | சட்டபிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருள்:– இல்லை**

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்: இல்லை**

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.23 17:43:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.

குறிப்பு:–

1. எந்த ஒரு சாட்சியும் விசாரணைக்கு 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கின் விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

/ உண்மை நகல் /

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.23 17:43:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.